DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.123/2014

**Complainant witness: PW–1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : V.T. முருகன் | தொழில் | : செங்கல் வியாபாரம் |
| த/பெ. | : தங்கவேல் | வயது | : 54 |
| ஊர் | : முத்துராமலிங்க தேவர் நகர், இராமேஸ்வரம். | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>01.12.2025</u>

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>CMP 842/2025 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி திரும்ப</u>**

**<u>அழைக்கப்பட்டு எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1) நான் கொடுக்கல் வாங்கல் வட்டி தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. ஏற்கனவே இது போன்ற செக் மோசடி வழக்கு வேறொரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கானது ஆதி ஸ்டோர்ஸ் மீது ரூ.10 லட்சத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் பெயர் தெய்வாணை என்பவர் ஆவார். 17.11.2013 ல் எனது தாயார் உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை 2012 ம் ஆண்டே இறந்துவிட்டார்.

2) எனது தாயார் உயிருடன் இருந்த சமயத்தில் அவர் கொடுக்கல் வாங்கல் பண்ணுவது வழக்கம் என்றால் இல்லை. எதிரியின் தாயாரும் எனது தாயாரும் நன்கு பழக்கமானவர்கள் ஆவார். அந்த பழக்கத்தின் அடிப்படையில் எனது தாயார் உயிருடன் இருந்த காலத்தில் எதிரியின் தாயாருக்கு கடன் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை. அவ்வாறு கடன் கொடுக்கும்போது எதிரியின் தாயாரிடம் எதிரியின் நிரப்படாத காசோலையில் கையொப்பம் மட்டும் பெற்று செக்யூரிட்டியாக வாங்கி வைத்திருந்தார் என்றால் அது தவறு.

3) 17.11.2013 காலகாட்டத்தில் எதிரி இராமேஸ்வரத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் கடன் வாங்கும்போது இருந்தார் அதன் பின்னர் எங்கு போனார் என்று எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள டி.முருகன் ஆறு இலட்சம் என்று எழுதிதான் எனக்கு கொடுத்தார். எங்கு வைத்து எழுதினார் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து எழுதினார்.

4) மேற்படி காசோலையில் கையொப்பமும் மற்ற எழுத்துக்களும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பேனா எழுதிக்கொண்டிருக்கும்போது மை முடிந்துவிட்டதால் வேறு ஒரு பேனா வைத்து எழுதினார். கையொப்பத்தை தவிர மற்ற எழுத்துக்கள் எதுவும் எதிரி ஜெயராமனுடைய எழுத்துக்கள் அல்ல என்றால் தவறு. நான் தாக்கல் செய்த வழக்கிலும் நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி காசோலையை எங்கள் வீட்டில் வைத்து வழங்கினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனது வீட்டில் வந்து எதிரி கடன் கேட்டார். நான் பணத்தோடு எதிரி வீட்டிற்கு சென்று பணத்தை கொடுத்துவிட்டு எதிரியின் வீட்டில் வைத்து பணத்தை கொடுத்துவிட்டு எதிரியின் வீட்டில் வைத்து காசோலையை வாங்கினேன். நான் மேலே சொல்லியுள்ள விபரங்கள் குறித்து வழக்கும் தாக்கல் செய்யவில்லை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம் நான் சொல்லியுள்ளேன் அதனை அவர் தாக்கல் செய்துள்ளார்.

5) நான் வருவமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை. நான் இராமேஸ்வரத்தில் லாட்ஜ் வைத்து தொழில் செய்கிறேனா என்றால் எனது தாயார் பெயரில் இருந்தது. எனது தாயார் இறந்ததற்கு பிறகு எனது சகோதரிகள் நடத்துகிறார்கள். அந்த விடுதியை பற்றி எனது தாயா‍ா் உயிருடன் இருந்தகாலத்தில் எனக்கோ எனது சகோதரிகளுக்கோ எந்தவித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அந்த விடுதியை நான்தான் நடத்தி வருகிறேன் என்றும் அந்த விடுதிக்கு ஜி.எஸ்.டியும் வருமான வரியும் 2013 முதல் செலுத்தி வருகிறேன் என்றும் தற்போது இந்த வழக்கிற்காக வருமான வரி செலுத்தவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6) நான் பல்வேறு நபர்களுக்கு இராமேஸ்வரத்தில் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறேன் என்றாலும் அது சம்பந்தமாக பல வழக்குகள் இராமநாதபுரத்திலும் இராமேஸ்வரத்திலும் தாக்கல் செய்கிறேன் என்றும் அது சம்பந்தமாக உண்மையில் கடன் கொடுத்திருந்தால் நான் வருமான வரியில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

7) 17.11.2013 ல் இந்த காசோலையை எதிரி வழங்கினார். ஆனால் அவர் அன்றைய தேதியிட்டு இந்த காசோலையை வழங்கவில்லை. ஒரு மாதம்

பின்தேதியிட்டு வழங்கியுள்ளார். நான் கலெக்சன் செலுத்திய பின் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது இல்லாததால் தபால் அலுவலகத்தில் எதிரி பெற்றுக்கொண்டதற்கான வழங்கிய சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.6 ல் யார் பெற்றுக்கொண்டார்கள் என்ற விபரம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பதல் அட்டை எனக்கு கிடைத்தது என்றும் அதில் எதிரியின் கையொப்பம் இல்லாததாலும் எதிரிக்கு சார்பு செய்யப்படாததாலும் அது எனது வழக்கிற்கு பாதகமாக இருப்பதால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

8) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை அதனால் எதிரியால் பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்பு நீதிமன்றத்தில் அழைப்பாணை அனுப்புவதற்கு படி கட்டினேன் என்றால் சரிதான். எதிரியால் அழைப்பாணை பெறப்பட்டதற்கான ஒப்புகை அட்டை நீதிமன்ற வழக்கு கோப்புகளில் உள்ளது என்றாலும் அது என்னிடம் காட்டப்படுவது என்றால் அதில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அவரது தாயார்தான் அதில் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். நான் அறிவிப்பு அனுப்பிய காலத்திலும் இந்த நீதிமன்றத்தில் இருந்து சென்ற அழைப்பாணை சென்ற காலத்திலும் எதிரி இந்த ஊரிலேயே கிடையாது என்பதால் எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை என்றால் அவர் இருந்தாரா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது.

9) நான் தேதியில் சொன்ன நாளில் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும் காசோலை எதுவும் எதிரியிடமிருந்து பெறவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே எனது தாயாரிடம் உள்ள நிரப்பப்படாத காசோலையை பின்னிட்டு நான் பூர்த்தி செய்து இவ்வழக்கை எதிரியின் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.01 10:24:43 +0530